# இயேசு ஊழியங்கள்

105/229, எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 600 049
போன: 9003009752

மின்னஞ்சல்: beten.yatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org


பிரியமுள்ள என் அன்பு மகளே,

அதிசீக்கிரமாக வரப்போகும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் நல்வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதமும் இந்த கடிதத்தின் மூலமாக உங்களை சந்திப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நீங்களும் உங்கள் கருவில் இருக்கும் குழந்தையும் சுகமுடனும் நலமுடனும் இருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசித்து என் தேவனை நன்றியோடு துதிக்கிறேன்.

இந்த கடைசிநாட்களில் பிறக்கப்பொகும் குழந்தைகள் எல்லாருமே தீர்க்கதரிசிகள், இரத்தச்சாட்சிகள் மற்றும் யுத்தவீரர்களின் அபிஷேகத்தைப்பெற்றவர்கள். அது மட்டும் அல்லாமல் இவர்கள் ஜெயிக்கப்பிறந்தவர்கள் என்று வேதம் கூறுகிறது. *வெளிப்படுத்தல் 12:11ல் மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல் ஆட்டுக்குட்டியின் இரத்ததினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.* இங்கு யாரைக்குறித்து ஜெயித்தார்கள் என்று சொல்லப்படுகிறது? இந்தக் கடைசிக்கால சந்ததியினர்தான் தங்கள் ஜீவனையும் பாராமல் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் சாத்தனை ஜெயிப்பார்கள். யார் இந்த கடைசிக்கால தலைமுறை? நீங்கள் கருவில் சுமந்து கொண்டு இருக்கும் குழந்தைதான் சாத்தானை ஜெயிக்கப் போகும் கடைசிக்கால சந்ததி. அதனால் உங்கள் குழந்தை கருவில் இருக்கும் போதே சாத்தனை அழிக்கக்கூடிய கடைசிக்கால தீர்க்கதரிசன அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த கர்ப்பகாலங்களில் இந்த அபிஷேகத்தை பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியம். உங்களை விட்டுக்கொடுத்து அதிகமாக ஜெபிக்கவேண்டியது அவசியம் நீங்கள் ஜெபிக்க ஜெபிக்க இந்த அபிஷேகம் உங்கள் கருவில் இருக்கின்ற குழந்தையின்மேல் ஊற்றப்படும். ஜெபிக்கும்போது தேவன் உங்களோடு பேசுவார் உங்கள் குழந்தையை குறித்த வெளிப்பாடுகளைக் கொடுப்பார். எனவே, நீங்கள் ஜெபத்திற்கு அதிக நேரத்தை செலவிடுங்கள் தேவனை துதியுங்கள். அப்பொழுது சாத்தானை ஜெயித்து, தேவனுடைய வருகைக்கு வழியை ஆயத்தப்படுத்தும் சந்ததியைப்பெற்று எடுப்பீர்கள்.

இப்பொழுதும் இந்த அபிஷேகத்திற்காக ஜெபிக்கப்போகிறேன் என்னோடு இணைந்து இந்த ஜெபத்தை விசுவாசத்தோடு ஏறெடுங்கள்.

மகா பரிசுத்தமுள்ள எங்கள் அன்பின் பரலோகப் பிதாவே, எனது அன்பு மகளையும் அவர்கள் கருவில் இருக்கும் குழந்தையையும் உம்முடைய பாதுகாப்பின் கரத்திற்குள் அர்ப்பணிக்கிறேன். இந்த நேரத்திலும் இவர்கள் கருவில் இருக்கும் குழந்தையை உமது கடைசிக்கால தீர்க்கதரிசன அபிஷேகத்தால் நிரப்பி சாத்தானை ஜெயிக்கிற வல்லமையை குழந்தைகுள் வைப்பீராக. இந்த குழந்தை உமக்காக வைரக்கியமாக எழும்புகிற குழந்தையாக மாற்றும். உம்முடைய வருகைக்கு வழியை ஆயத்தப்படுத்துகிற குழந்தையாக மாறட்டும். உம்முடைய கிருபையும் பாதுகாப்பும் இந்த மாதம் முழுவதும் இவர்களை சூழ்ந்துகொள்ளட்டும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் எங்கள் பரிசுத்தமுள்ள நல்ல பிதாவே. ஆமென்.

என் அன்பு மகளே, இந்த மாதம் முழுவதும் மேலே உள்ள வசனத்தை விசுவாசத்தோடு வாசித்து இந்த அபிஷேகத்தை தேவனிடம் இருந்து பெற்றுகொள்ளுங்கள். தேவன் தாமே உங்களையும் உங்கள் குழந்தையையும் ஆசீர்வதித்து பாதுகாத்துக்கொள்வாராக.
மேலும் ஜெப உதவிக்கு எங்களோடு தொடர்புகொள்ளுங்கள் : 9003009752

அன்புடன்

S. Selvaraj

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*